# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0698/ஊராட்சி/2018

ஆணை எண்: 134/2018

நாள்: 6/06/2018

P. அர்ச்சுனன்,
நன்னியூர் ஊராட்சி, மண்மங்கலம் வட்டம்,
கரூர்மாவட்டம். – மனுதாரர்

1. ஊராட்சி செயலாளர்,
நன்னியூர் ஊராட்சி,

2. வட்டார வளர்ச்சிஅலுவலர்,
கரூர் ஊராட்சி ஒன்றியம் – எதிர் மனுதாரர்கள்

## ஆணை

கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், நன்னியூர் ஊராட்சியில் வசிக்கும் திரு. P. அர்ச்சுனன் அவருடைய 31.5.2018 நாளிட்ட புகார் மனுவில் நன்னியூர் கிராம ஊராட்சியில் திருமதி. நளினி என்பவர் ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வருவதாகவும், அவர் ஊராட்சி பணிகள் எதுவும் பார்ப்பதில்லை என்றும், ஊராட்சி வேலைகள் மற்றும் பராமரிப்பு பணிகள் அனைத்தையும் அவரது கணவர் முன்னாள் மக்கள் நலப் பணியாளர் திரு. மூர்த்தி என்பவர்தான் மேற்கொள்கிறார் என்றும், முறைகேடாக பல வேலைகள் செய்து ஊராட்சி நிதியை அவரது மனைவியின் உதவியுடன் பெற்று வருகிறார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் கீழ்கண்ட முறைகேடுகளை புரிந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்:–

(1) எந்த பதவியிலும் இல்லாத மூர்த்தி, ஊராட்சி நிர்வாகத்தை நடத்துகிறார்.

(2) குடிநீர் பைப்லைன் பழுது வேலைகளை ஊராட்சி ஸ்வப்பர் குருசாமி செய்ததை மூர்த்தி செய்ததாக போலியாக பில் தயாரித்து பணம் எடுத்து வருகிறார்,

(3) தேவையில்லாத இடங்களில் குடிநீர் குழாய் இணைப்புகளில் ஏர் வால்வு வைத்து பணம் கையாடல் செய்கிறார்,

(4) மத்திய அரசு வீடு கட்டும் திட்டத்தில், அதிகாரிகளுக்கு பணம் வழங்கப்பட வேண்டுமென பயனாளிடம் ரூ.5,000/– கேட்டு வாங்குகிறார்,

(5) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் போலியாக பல நபர்களை சேர்த்து பணம் வழங்கப்படுகிறது,

(6) கிணறுகளை சுத்தம் செய்யாமலேயே சுத்தம் செய்ததாக பில்போட்டு மோசடி செய்தது,

(7) ஒன்றிய மேற்பார்வையாளர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலாளர் துணையுடன் போலி பில்கள் தயாரித்து ஊராட்சி பணம் முறைகேடாக எடுக்கப்படுகிறது என்றும், சுகாதார பொருட்கள் வாங்கியதால் முறைகேடுகள் நடந்துள்ளன எனத் தெரிவித்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு 7–ன் படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பலாம் என முடிவு செய்து, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 6–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 8.6.18

பெறுநர்:
திரு. P. அர்ச்சுனன்,
அம்பேத்கார் நகர்,
செவ்வந்தி பாளையம், நன்னியூர் ஊராட்சி,
மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம்.

**நகல்:**
1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
கரூர் மாவட்டம்
கரூர் – (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்
3. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி)